# நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 7-2 - கங்குலும் பகலும்[1]
## (பராங்குச நாயகி பெரிய பெருமாளிடத்து மோஹித்திருக்க, 'இந்நாயகி விஷயமாக என் செய்ய நீர் எண்ணுகின்றீர்?' என்று திருத்தாயார் கேட்கும் பாசுரம்)

3348 * கங்குலும் பகலும் கண் துயில் அறியாள் *
கண்ணநீர் கைகளால் இறைக்கும் *
சங்கு சக்கரங்கள் என்று கை கூப்பும் *
தாமரைக் கண் என்றே தளரும் **
எங்ஙனே தரிக்கேன் உன்னை விட்டு? என்னும் *
இருநிலம் கைதுழா இருக்கும் *
செங்கயல் பாய் நீர்த் திருவரங்கத்தாய்! *
இவள் திறத்து என் செய்கின்றாயே? 1

3349 என் செய்கின்றாய்? என் தாமரைக் கண்ணா!
என்னும் * கண்ணீர் மல்க இருக்கும் *
என் செய்கேன்? எறிநீர்த் திருவரங்கத்தாய்!
என்னும் * வெவ்வுயிர்த்துயிர்த்து உருகும் **
முன் செய்த வினையே! முகப்படாய் என்னும் *
முகில் வண்ணா! தகுவதோ?[2] என்னும் *
முன் செய்து இவ்வுலகம் உண்டுமிழ்ந்தளந்தாய்! *
என் கொலோ முடிகின்றது இவட்கே? 2

3350 வட்கிலள் இறையும் மணிவண்ணா! என்னும் *
வானமே நோக்கும் மையாக்கும் *
உட்குடை அசுரர் உயிர் எல்லாம் உண்ட *
ஒருவனே! என்னும் உள் உருகும் **
கட்கிலீ! உன்னைக் காணுமாறு அருளாய் *
காகுத்தா! கண்ணனே! என்னும் *
திட்கொடி மதிள் சூழ் திருவரங்கத்தாய்! *
இவள் திறத்து என் செய்திட்டாயே? 3

3351 இட்ட கால் இட்ட கையளாய்[3] இருக்கும் *
எழுந்துலாய் மயங்கும் கை கூப்பும் *
கட்டமே காதல் என்று மூர்ச்சிக்கும் *
கடல் வண்ணா! கடியை காண் என்னும் **
வட்டவாய் நேமி வலங்கையா! என்னும் *
வந்திடாய் என்றென்றே மயங்கும் *
சிட்டனே! செழுநீர்த் திருவரங்கத்தாய்! *

[1] இது கோவில் திருவாய்மொழி
[2] தகவிதோ
[3] கைகளாய்

இவள் திறத்து என் சிந்தித்தாயே? 4

3352 சிந்திக்கும் திசைக்கும் தேறும் கை கூப்பும் *
திருவரங்கத்துள்ளாய்! என்னும்
வந்திக்கும் * ஆங்கே மழைக் கண்ணீர் மல்க *
வந்திடாய் என்றென்றே மயங்கும் **
அந்திப் போது அவுணன் உடல் இடந்தானே!
அலைகடல் கடைந்த ஆரமுதே *
சந்தித்து உன் சரணம் சார்வதே வலித்த *
தையலை மையல் செய்தானே! 5

3353 மையல் செய்து என்னை மனம் கவர்ந்தானே!
என்னும் * மா மாயனே! என்னும் *
செய்ய வாய் மணியே! என்னும் * தண் புனல் சூழ்
திருவரங்கத்துள்ளாய்! என்னும் **
வெய்ய வாள் தண்டு சங்கு சக்கரம் வில் ஏந்தும் *
விண்ணோர் முதல்! என்னும் *
பைகொள் பாம்பணையாய்! இவள் திறத்தருளாய் *
பாவியேன் செய்யற்பாலதுவே 6

3354 பால துன்பங்கள் இன்பங்கள் படைத்தாய்! *
பற்றிலார் பற்ற நின்றானே! *
கால சக்கரத்தாய்! கடல் இடம் கொண்ட *
கடல் வண்ணா! கண்ணனே! என்னும் **
சேல்கொள் தண் புனல் சூழ் திருவரங்கத்தாய்!
என்னும் * என் தீர்த்தனே! என்னும் *
கோலமா மழைக் கண் பனி மல்க இருக்கும் *
என்னுடைக் கோமளக் கொழுந்தே 7

3355 கொழுந்து வானவர்கட்கு! என்னும் * குன்றேந்திக்
கோநிரை காத்தவன்! என்னும் *
அழும் தொழும் ஆவி அனலவெவ்வுயிர்க்கும் *
அஞ்சன வண்ணனே! என்னும் **
எழுந்து மேல் நோக்கி இமைப்பிலள் இருக்கும் *
எங்ஙனே நோக்குகேன்? என்னும் *
செழும் தடம் புனல் சூழ் திருவரங்கத்தாய்! *
என் செய்கேன் என் திருமகட்கே? 8

3356 * என் திருமகள் சேர் மார்வனே! என்னும்
என்னுடை ஆவியே! என்னும் *
நின் திரு எயிற்றால் இடந்து நீ கொண்ட *
நிலமகள் கேள்வனே! என்னும் **

அன்றுருவேழும்[4] தழுவி நீ கொண்ட *
ஆய்மகள் அன்பனே! என்னும் *
தென் திருவரங்கம் கோயில் கொண்டானே! *
தெளிகிலேன் முடிவு இவள் தனக்கே 9

3357 முடிவு இவள் தனக்கு ஒன்றறிகிலேன் என்னும் *
மூவுலகாளியே! என்னும் *
கடி கமழ் கொன்றைச் சடையனே! என்னும் *
நான்முகக் கடவுளே! என்னும் **
வடிவுடை வானோர் தலைவனே! என்னும் *
வண்திருவரங்கனே! என்னும் *
அடி அடையாதாள் போல் இவள் அணுகி
அடைந்தனள் * முகில் வண்ணன் அடியே 10

3358 * முகில் வண்ணன் அடியை அடைந்து அருள் சூடி
உய்ந்தவன் * மொய்புனல் பொருநல் *
துகில் வண்ணத் தூநீர்ச் சேர்ப்பன் * வண்பொழில் சூழ்
வண்குருகூர்ச் சடகோபன் **
முகில் வண்ணன் அடி மேல் சொன்ன சொல் மாலை *
ஆயிரத்து இப்பத்தும் வல்லார் *
முகில் வண்ண வானத்து இமையவர் சூழ
இருப்பர் * பேரின்ப வெள்ளத்தே 11

**அடிவரவு:** கங்குலும் என் வட்கிலள் இட்ட சிந்திக்கும் மையல் பால
கொழுந்து என் முடிவு முகில் வெள்ளை

[4] அன்றுருமேழும்